# ஆவியில், மனதில், சரீரத்தில், பொருளாதாரத்தில் வெற்றி ஜீவியம் ஜீவிப்பதற்கான அறிக்கைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவியில், மனதில், சரீரத்தில், பொருளாதாரத்தில் வெற்றி ஜீவியம் ஜீவிப்பதற்கான அறிக்கைகள்

பிதாவே உமக்கு நன்றி கூறுகின்றேன்.

கிறிஸ்து இயேசுவுக்குள் நான் தேவனுடைய நீதியாய் இருக்கிறேன். அத்துடன் நான் விசுவாசத்தினால் பிழைக்கிறேன்.

11 கொரிந்தியர் 5:21, ரோமர் 1:17

இயேசு கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி என்னுடை சரீரத்தில் வாசமாயிருக்கிற படியினாலே சாவுக்கேதுவான என்னுடைய சரீரத்தை உயிர்ப்பிப்பார்.

ரோமர் 8:11

கிறிஸ்துவானவர் என்னை விடுதலையாக்கின சுதந்திரத்தில் நான் நடக்கிறேன். ஆவியின் கனியாகிய அன்பு, சந்தோசம், சாந்தம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், இச்சையடக்கம் என்னுடைய ஜீவியத்தில் கிரியை செய்கிறது.

11 கொரிந்தியர் 3:17, கலாத்தியர் 5:22-23

இயேசு தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களை சிலுவையின் மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் நான் குணமானேன்.

1 பேதுரு 2:24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் தாமே என்னுடைய பலவீனங்களை ஏற்றுக்கொண்டு என்னுடைய நோய்களை சுமந்தார். அவருடைய தழும்புகளால் நான் குணமானேன்.

மத்தேயு 8:17, 1பேதுரு 2:24

மரத்திலே தூக்கப்பட்டவன் எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி கிறிஸ்து என்னை சாபத்தின் பிரமாணத்திலிருந்து நீக்கும்படிக்கு அவர் தாமே எனக்காக சாபமானார்.

கலாத்தியர் 3:13

நான் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினாலும் என்னுடைய சாட்சியின் வசனத்தினாலும் வியாதியையும் நோய்களையும் மேற்கொள்கின்றேன். இயேசு தாமே தம்முடைய சொந்த சரீரத்திலே சகல வியாதிகளையும் வேதனைகளையும் மரத்திலே சுமந்து தீர்த்தார். அவருடைய தழும்புகளால் நான் குணமானேன்.

வெளி 12:11, மத்தேயு 8:17, 1பேதுரு 2:24

கர்த்தருடைய சந்தோஷம் என்னிலே நிலைத்திருக்கிறது நான் என் தேவனுக்குள் எப்பொழுதும் களிகூருவேன்.

யோவான் 15:11, பிலிப்பியர் 4:4

என்னுடைய விசுவாசத்தின் பரீட்சையானது என்னிலே பொறுமையை உண்டாக்குகிறது. நான் தொடர்ந்து விசுவாசத்திலே பெலமுள்ளவனாகும் படிக்கு பொறுமை என்னில் பூரணமாய் கிரியை செய்கிறது.

யாக்கோபு 1:3-4

நான் வசனத்தை கேட்கிறவன் மாத்திரமல்ல, நான் வசனத்தை செய்கிறவனுமாயிருக்கிறேன்.

யாக்கோபு 1:22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசு கிறிஸ்து இவ்வுலகத்தை ஜெயித்தபடியினாலே என்னுடைய இருதயம் கலக்கமடைகிறதில்லை. நான் அவராலே விசுவாசத்தைக்கொண்டு நீதிமானாக்கப்பட்டபடியினால் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறேன்.

யோவான் 14:27, 16:33, ரோமர் 5:1

தேவன் எனக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியைக் கொடுத்திருக்கிறார்.

11தீமோத்தேயு 1:7

மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய தேவனுடைய அன்பை விட்டு என்னை பிரிக்கமாட்டாது.

ரோமர் 8:38-39

நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியானவராலே தேவனுடைய அன்பு என்னுடைய இருதயத்தில் ஊற்றப்பட்டிருக்கிறது.

ரோமர் 5:5

சகலமும் என்னுடைய நன்மைக்கேதுவாகவே நடைபெறுகிறது. கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது. அவர்களுடைய விண்ணப்பங்களுக்கு அவருடைய செவிகள் திறந்திருக்கிறது.

ரோமர் 8:28, 1பேருது 3:12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவ வசனத்திலுள்ள என் நம்பிக்கையை நான் இழந்து போகிறதில்லை. நான் தேவனுடைய சித்தத்தை செய்கிறபடியினாலே வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை பெற்றுக் கொள்கின்றேன்.

எபிரேயர் 10:35-36

இருளின் அதிகாரத்தினின்று நான் விடுதலையாக்கப்பட்டிருக்கிறேன், இயேசு கிறிஸ்துவின் இராட்சியத்திற்கு உட்படுத்தப்பட்டுமிருக்கிறேன். பிசாசுக்கு என்மேல் எந்த அதிகாரமும் கிடையாது.

கொலோசெயர் 1:13

நான் புதிய சிருஷ்டியாய் இருக்கிறேன் பழையவைகள் எல்லாம் ஒழிந்துபோயின. இயேசு கிறிஸ்து என்னும் ஒருவராலே என் ஜீவியத்தை நான் ஆளுகை செய்கிறவனாயிருக்கிறேன்.

11கொரிந்தியர் 5:17, ரோமர் 5:17

நான் மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிறபடியினாலே எனக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. கிறிஸ்து இயேசுவினுடைய ஜீவனின் பிரமாணம் என்னை பாவம், மரணம் என்னும் பிரமாணங்களில் நின்று விடுதலையாக்கிற்று.

ரோமர் 8:1-2

நான் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடுகிறேன். அனேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறேன். ஒளியிலுள்ள பரிசுத்தவான்களிடத்திலே பங்குள்ளவனாயிருக்கிறேன்.

1தீமோத்தேயு 6:12, கொலோசெயர் 1:12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பின்னானவைகளை மறந்து எனக்கு முன்னாயிருக்கிறவைகளை நாடுகிறேன். கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரம அழைப்பின் பந்தயப்பொருளை நோக்கி முன்னேறுகிறேன்.

பிலிப்பியர் 3:13-14

பிசாசையும் அவனுடைய தூதர்களையும் மிதிக்கவும் அவனுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் எனக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஒன்றும் என்னை சேதப்படுத்தாது.

லூக்கா 10:19

என்னை நேசிக்கிற இயேசுக்கிறிஸ்துவின் மூலமாக நான் எல்லாவற்றிலும் வெற்றி சிறந்தவனாகவிருக்கிறேன். தேவன் நம்முடைய பட்சத்தில் இருந்தால் வெற்றிகரமாக என்னை எதிர்ப்பவன் யார்?

ரோமர் 8:37,31

அவிசுவாசத்தினாலே நான் தேவனுடைய வாக்ககுத்தத்தங்களைக் குறித்து அசைக்கப்படுவதில்லை. நான் விசுவாசத்திலே பலமுள்ளவனாயிருக்கிறேன். ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் என்னிலே இருக்கிறவர் பெரியவர்.

ரோமர் 4:20, 1யோவான் 4:4

சீர்கேடான வார்த்தையொன்றும் என் வாயிலிருந்து புறப்படுவதில்லை. நான் பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துவதுமில்லை. சகலவிதமான கசப்புக்களையும், கோபங்களையும், மூர்க்கத்தையும், துர்க்குணத்தையும் என்னைவிட்டு அகற்றுகிறேன்.

எபேசியர் 4:29-31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய சரீரத்தை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக தேவனுக்கு ஒப்புக்கொடுக்கிறேன். நான் இந்த உலகத்துக்கு ஒத்த வேஷம் தரியாமல் தினசரி என் மனதை புதிதாக்குறதினாலே நன்மையும், பிரியமும், பரிபூரணமான தேவனுடைய சித்தத்தை என் ஜீவியத்திலே செய்ய முற்படுகிறேன்.

ரோமர் 12:1-2

என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு.

பிலிப்பியர் 4:13

என்னுடைய ஜீவியத்தின் எல்லாப்பகுதியிலும் கர்த்தருக்கு பிரியமுண்டாக நான் நடக்கிறேன். தேவனை அறிகிற அறிவிலே விருத்தியடைந்து நான் சகலவிதமான கனிகளையும் அனுதினமும் என் தேவனுக்காக கொடுக்கிறேன்.

கொலோசெயர் 1:10

நான் நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகிறதில்லை, ஏனெனில் நான் தேவனுடைய வார்த்தையை நம்பி செயல்படுகிறபொழுது ஏற்றவேளையில் தக்க பலனை நான் அறுப்பேன் என்று அறிந்திருக்கிறேன்.

கலாத்தியர் 6:9

நான் கர்த்ருடைய பணியில் எப்பொழுதும் அசைக்கப்படாதவனாயும் உறுதியாயும் இருக்கிறேன். ஏனெனில் கர்த்தருக்குள் என் பிரயாசம் ஒருபொழுதும் வீணாகப் போகாது.

1 கொரிந்தியர் 15:58

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் விசுவாசியாய் இருக்கிறபடியினால் இந்த அடையாளங்கள் என்னைத் தொடருகிறது. இயேசுவின் நாமத்தில் பிசாசுகளைத் துரத்துகிறேன், நவமான பாஷைகளை பேசுகிறேன், வியாதியஸ்தர்கள் மேல் கரங்களை வைக்கிறபொழுது அவர்கள் சொஸ்தமாகிறார்கள்.

மாற்கு 16:17-18

நான் இப்பொழுதிருக்கிற இந்த பொல்லாத பிரபஞ்சத்திலிருந்து விடுவிக்கப்பட்டேன். ஏனெனில் அதுவே என்னுடைய பிதாவாகிய தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

கலாத்தியர் 1:6

நான் ஒன்றுக்கும் கவலைப்படாமல் என்னுடைய ஜெபங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய வேண்டுதலினால் தேவனுக்கு தெரியப்படுத்துகிறேன். அதனால் எல்லாப்புத்திக்கும் மேலான தேவ சமாதானம் என்னுடைய இருதயத்தை ஆண்டுகொள்ளுகிறது.

பிலிப்பியர் 4:6-7

என்னுடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் நான் உறுதியாய் இருக்கிறேன். ஏனெனில் வாக்குத்தத்தம் பண்ணின தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்.

எபிரேயர் 10:23

நான் நிறைவாக விதைக்கிறேன், அதனால் நிறைவாக அறுக்கிறேன். என் தேவன் என்னிடத்திலே எல்லா நற்கிரியையும் செய்ய போதுமான கிருபையை பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார்.

11 கொரிந்தியர் 9:6-8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா ஆசீர்வாதங்களும் என்னுடையது ஏனெனில் நான் முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுகிற படியினால்.

மத்தேயு 6:33

தேவனுடைய வார்த்தையில் அறிவித்திருக்கிறபடி நான் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் பரலோகத்திலிருக்கிற என் பிதா அதற்கு செவிமடுக்கிறார். பரலோக பிதா அதற்கு செவிமடுத்தால் நான் கேட்டவற்றைப் பெற்றுக்கொண்டேன் என்று அறிந்திருக்கிறேன்.

1 யோவான் 5-14-15

எல்லா துரைத்தனத்திற்கும் அதிகாரத்திற்கும் அவர் தலையாயிருக்கிறபடியினாலே நான் அவருக்குள் பரிபூரணமாயிருக்கிறேன்.

கொலோசெயர் 2:10

என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின் படி என்னுடைய குறைவுகளையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் அவருடைய மகிமையிலே நிறைவாக்குகிறார்.

பிலிப்பியர் 4:19

நான் அவரோடே கூட சிலுவையில் அறையப்பட்டேன். அவரோடே கூட உயிர்த்தெழுப்பப்பட்டிருக்கிறேன். அவரோடே கூட உன்னதங்களிலே உட்கார்ந்திருக்கிறேன்.

கலாத்தியர் 2:20, எபேசியர் 2:7

அவருக்குள் நான் அசைகிறேன், ஜீவிக்கிறேன், பிழைக்கிறேன்.

அப்போஸ்தலர் 17:28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் கர்த்தருடைய கைவேலையாயிருக்கும்படிக்கு கிறிஸ்துவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறேன். தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், செய்கையையும் என்னில் உண்டாக்குகிறார்.

எபேசியர் 2:10, பிலிப்பியர் 2:13

பரிசுத்த ஆவியானவர் சகல சத்தியத்திற்குள்ளும் என்னை நடத்துகிறார். தேவனுடைய சித்தத்தின்படி எனக்காகவும் பரிந்து பேசுகிறார்.

யோவான் 16:13, ரோமர் 8:27

நான் கொடுத்திருக்கிறேன் அதனால் எனக்கு கொடுக்கப்படுகிறது. அமுக்கி, குலுக்கி, சரிந்து விழும்படி நன்றாய் அளந்து என்மடியிலே போடுகிறார்கள்.

லூக்கா 6:38

கிறிஸ்து என்னை சகல பிரமாணங்களின் சாபத்திற்கும் நீங்கலாக்கி மீட்டுக் கொண்டபடியினால் நான் நிறைவான ஜீவியத்தை உடையவனாயிருக்கிகேன்

கலாத்தியர் 3:13, யோவான் 10:10

ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதமெல்லாம் என்னுடையது.

கலாத்தியர் 3:14

எல்லா ஞானத்தோடும் தேவனுடைய வார்த்தை என்னிடத்திலே அபரிமிதமாய் வாசமாயிருக்கிறது.

கொலோசெயர் 3:16

இயேசுவே என் கர்த்தரும், ஞானமும், நீதியும், பரிசுத்தமும், மீட்புமாயிருக்கிறார்.

1 கொரிந்தியர் 1:31

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தேவனுடைய சுவிகார புத்திரனாயிருக்கிறபடியினால் நியாயப்பிரமாணத்தின் சாபங்களுக்கு நீங்கலாக்கப்பட்டிருக்கிறேன்.

கலாத்தியர் 3:13

நான் தேவனுடைய பிள்ளையாயிருப்பதனால் நான் போகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பேன், நான் வருகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பேன்.

யோவான் 1:12, உபாகமம் 28:6

நான் தேவனுடைய பிள்ளையாயிருப்பதனால் நான் பிதாவை நோக்கி கூப்பிடுகிறபோது அவர் எனக்கு உத்தரவு கொடுத்து நான் அறியாததும், எனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை அறிவிப்பார்.

யோவான் 1:12, எரேமியா 33:3

நான் பரிசுத்த ராஜரீக ஆசாரியனாய் இருப்பதனால் ஜாதிகள் என்னுடைய ஒளியினிடத்திற்கு நடந்துவருவார்கள்.

1பேதுரு 2:9, ஏசாயா 60:3

கர்த்தருடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார். சிறுமைப்பட்டவர்களுக்கும், நொறுங்குண்டவர்களுக்கும் நற்செய்தியை அறிவிக்க என்னை அபிஷேகம் பண்ணியிருக்கிறார்.

ஏசாயா 61:1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Muhaideen Construction
A..Dar.. Road
Sammanthurai
Tel 0752936777

R.M. Wasantha
PC.70406
Traffic Branch
Police Station
Kalmunai

Wasantha
PC.70406
Traffic Branch
Police Station
Kalmunai

M.A. Muhamed Mujeeb
PS-88985
Traffic Branch
Police Station
Kalmunai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org